Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 01 2024

திங்கட்கிழமை ஜூலை 01, 2024 | ஒளி: 09 கதிர் 284 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## எரிபொருள் விலையில் திருத்தம்

எரிபொருள் விலை திருத்தம் ஞாயிற்றுக்கிழமை (30) இரவு இடம்பெறும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாதாந்திர எரிபொருள் திருத்தத்தின் படி இந்த திருத்தம் இடம்பெறும் என அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், டீசல் விலை இன்றிரவு குறைக்கப்பட்டால், பஸ் கட்டணங்களில் மீண்டும் விலையில் திருத்தம் செய்யப்படாது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# தாமரை மொட்டில் தனி வேட்பாளர்

■ நாமலை அழைத்து வர முற்படும் போது, அவர் இன்னும் சோம்பேறியாக இருப்பதாகக் கூறுகிறார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனி வேட்பாளர் ஒருவர் நிச்சயமாக நிறுத்தப்படுவார் என ஸ்ரீலங்கா பொது மக்கள் முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார். அப்போது இருந்த பிரச்சினைகளைத் தீர்க்கவே ரணில் விக்ரமசிங்கவை ஆட்சிக்கு கொண்டு வந்ததாக கூறிய திஸ்ஸ குட்டியாராச்சி, ரணில் விக்ரமசிங்க இல்லாமல் ரோஹித அபேகுணவர்தன இருந்தாலும் அந்த வேலையை காஞ்சனாலா ஷெஹான் சரியாக செய்வார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அகலவத்தை தொகுதி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரிசையை நிறுத்தியவர்களோ, இரண்டு ஐம்பதுக்கு உணவு கொடுத்தவர்களோ, பால் மா பாக்கெட்டின் விலையைக் குறைத்தோ, ஒருவரைக் கொன்றோ தலைவர்களை நியமிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2



# இரு வாரங்களில் 12 பேர் இணைவர்

■ ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அரசாங்கத்துக்குச் சென்றவர்களே இவ்வாறு இணையவுள்ளனர்




எதிர்வரும் இரண்டு வாரங்களில் 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடன் இணையவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு வரவுள்ளதாக அரசாங்கம் ஒரு வருடமாகக் கூறி வருகின்ற போதிலும், எவரும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதியால் ஒத்திவைக்க முடியாது. ஆனால், பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையை முன்வைத்து, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அந்தப் பிரேரணை நிறைவேற்றி, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியும்.

தொடர்ச்சி P2

## இரு தினங்கள் விசேட அமர்வு



வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்காக ஜூலை 2,3ஆம் திகதிகளில் விசேட பாராளுமன்ற அமர்வை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை (21) கூடிய பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவே, விசேட பாராளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கான அங்கிகாரத்தை வழங்கியுள்ளது. தொடர்ச்சி P2

## மிளகாயில் ஐஸ்கிரீம்



இந்நாட்டில் முதன்முறையாக மிளகாயில் இருந்து ஐஸ்கிரீமை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த தயாரிப்பு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள விவசாய துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி பங்களிப்பின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## “நினைப்பது நகைப்புக்குரியது”

நாட்டுக்காக நான் செய்த சில விடயங்களை மறந்தாலும் நாட்டு மக்கள் அவற்றை நினைவு கூருவார்கள் என நினைப்பது நகைப்புக்குரியது என முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா, தனது 80வது பிறந்தநாளை ஜூன் 29ஆம் திகதியன்று தனது முகநூல் பதிவொன்றை இட்டுள்ளார். அந்த பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

“இன்று நான் இந்த பூமியில் எழுபத் தொன்பதாவது வயதைக் கடந்து எண்பது வயதை எட்டியுள்ளேன்.



தொடர்ச்சி P2

## குளத்துக்கு நீராடச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு

■ பு.கஜிந்தன்

இரணைமடுக் குளத்தில் நீராடச் சென்ற 14 வயது சிறுவன் காணாமல் போன நிலையில், ஞாயிற்றுக்கிழமை(30) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளத்தில் நீராடுவதற்காக, அச்சிறுவன், தனது சகோதரன் உட்பட நால்வருடன் சென்றுள்ளான்.

சனிக்கிழமை (29) காலை 11.30 மணியளவில் நீராடச் சென்ற இவர்களில் 14 செல்வரத்தினம் றுசாந்தன் நீரில் மூழ்கி விட்டார்.



தொடர்ச்சி P2

## ரொபர்ட் கப்ரோத் வருகிறார்

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவிற்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் (Robert Kaproth) இலங்கை வரவுள்ளார்.

அவருடைய விஜயம் குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகள் மற்றும் நிதித்துறை தலைவர்களுடன் கலந்துரையாடல்களை கப்ரோத் முன்னெடுக்க உள்ளார். தொடர்ச்சி P2



## தேர்தல்கள் தொடர்பில் மக்களிடம் பெரும் சந்தேகம்

“செப்டெம்பர் 16 முதல் ஒக்டோபர் 16 வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் பொதுமக்களுக்கு நியாயமான சந்தேகம் உள்ளது” என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



கொழும்பில் சனிக்கிழமை (29) நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது மக்களின் ஒருமித்த கருத்தைச் சிதைத்து அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையே போர் நடப்பதாகத் தெரிகின்றது. சரியான நேரத்தில் தேர்தல்கள் நடத்துவது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகும், தொடர்ச்சி P2

## உறுமய...

20 இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் 'உறுமய' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் 41,960 பயனாளிகளில் 600 பேருக்கு அடையாள உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு வெல்லவாயவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(30) நடைபெற்றது.



## நால்வர் தாவுவர்?

பாராளுமன்றத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஜனாதிபதி உரையாற்றும் போது, எதிர்க்கட்சியின் நான்கு உறுப்பினர்களில் இருவர் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் அரசாங்கம் ஏற்கனவே கலந்துரையாடலை முடித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ச்சி P2

## மிதந்த போத்தலை திறந்து அருந்திய ஐவர் பலி



சர்வதேச கடலில் ஆபத்தான நிலையில் இருந்த 6 மீனவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றைய மீனவரை காப்பாற்ற கடற்படை வைத்தியர் உட்பட கடற்படை குழு முயற்சித்து வருவதாக கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

தங்காலை துறைமுகத்தில் இருந்து கடந்த 4ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைகளுக்காக 6 மீனவர்களை ஏற்றிக்கொண்டு “டெவோன் 5” என்ற பல்நாள் மீன்பிடிக் கப்பல் சென்றுள்ளது.

தங்காலை துறைமுகத்தில் இருந்து சுமார் 675 கிலோமீற்றர் தொலைவில் சர்வதேச ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த மீனவர்கள் கடலில் மிதந்த மதுபான போத்தலை குடித்துள்ளனர். அதன் பின்னரே ஆபத்தான நிலையில் விழுந்துள்ளனர்.

கடற்படையின் கூற்றுப்படி, பல நாள் கப்பலின் கேப்டன் திரவத்தை குடித்த சில நிமிடங்களில் இறந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “நாளாந்த வேதனத்தை அதிகரிக்க முன்வரவும்”

பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கப்பாட்டின் அடிப்படையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை அதிகரிக்க முன்வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியினூடாக கனவரல்ல இல-3 தமிழ் மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் பாதை புனரமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு சனிக்கிழமை (29) நடைபெற்றது .அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்தார்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பிலான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது .வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் போது மேலும் வாழ்க்கை செலவு அதிகரிக்கக் கூடும் என்பதினால் பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும் தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# தாமரை மொட்டில் தனி வேட்பாளர்


"நாமலை அழைத்து வர முற்படும் போது, அவர் இன்னும் சோம்பேறியாக இருப்பதாகக் கூறுகிறார், அவர் எங்கே சோம்பேறியாக இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை," என்றும் தெரிவித்த திஸ்ஸ குட்டியாராச்சி அநுரகுமாரவிடம் பொருளாதாரக் கொள்கை இல்லை என்றார்.

# இரு வாரங்களில் 12 பேர் இணைவர்

எனினும், கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்களின் போது, அரசாங்கத்துக்கு 112 வாக்குகளே கிடைத்தன. இது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை. தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து பாரிய கூட்டணியை ஐக்கிய மக்கள் சக்தியே உருவாக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலரும் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளப் போகின்றனர் என கடந்த இரண்டு வருடங்களாகக் கூறிவருகின்றனர். எனினும், அவ்வாறு நடக்கவில்லை. எனினும், எதிர்வரும் இரண்டு வாரங்களில் 12 பேர் எம்முடன் இணைவர். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அரசாங்கத்துக்குச் சென்றவர்களே இவ்வாறு இணையவுள்ளனர் என்றார்.

# இரு தினங்கள் விசேட அமர்வு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (02) விசேட உரையை ஆற்றியதன் பின்னர், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பிலான விவாதமும் நடத்தப்படும்.

# மிளகாயில் ஐஸ்கிரீம்



வெலிமட தரகல லசந்த ருவன் லங்காதிலக என்ற கண்டுபிடிப்பாளரே இவ்வாறு மிளகாயில் இருந்து ஐஸ்கிரீமை தயாரித்துள்ளார்.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா ஆகியோருக்கு மிளகாய் ஐஸ்கிரீம் வழங்கப்பட்டது.

இந்த மிளகாய் ஐஸ்கிரீம் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாகச் சந்தைக்கு அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் இனிப்பு மற்றும் காரமான மிளகாயை ஒன்றாக இணைத்து புதிய சுவையை அனுபவிக்க முடியும் எனவும் லங்காதிலக தெரிவித்தார்.

ஊவா பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் வழிகாட்டுதலின் கீழ், இந்த சில்லி ஐஸ்கிரீம் செய்முறை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த செய்முறை வெற்றியடைவதால், இந்த தயாரிப்பு சந்தைக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விதைகளைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் காய்ந்த மிளகாயின் பட்டையைப் பயன்படுத்தி இந்த உபத் தயாரிப்பு தயாரிக்கப்படுவதாகவும், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்காக இரண்டு வகையான பொருட்கள் அறிமுக ப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இந்த மிளகாய்கள் ஐஸ்கிரீம் சந்தைக்கு வெளியிடப்படும் என்றும் ருவன் லங்காதிலக்க தெரிவித்தார்.

# எரிபொருள் விலையில் திருத்தம்

எரிபொருள் விலை திருத்தத்தின் பிரகாரம் பேருந்து கட்டணம் 5 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அது திங்கட்கிழமை (01) முதல் அமுலுக்கு வரவுள்ளது. குறைந்தபட்ச பேருந்து கட்டணம் ரூ. 28 என அறிவிக்கப்பட்டுள்ளது.

# "நினைப்பது நகைப்புக்குரியது"

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் என் நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல விஷயங்களைச் செய்திருக்கிறேன். .

நான் பல விஷயங்களை மறந்திருக்கலாம். அவற்றில் சிலவற்றை நான் மறந்துவிட்டேன் என்றால், நாட்டு மக்கள் அவற்றை நினைவில் வைத்திருப்பதை எண்ணுவது நகைப்புக்குரியது. ஆனால் அன்று முழுவதும் எனக்குக் கிடைத்த வாழ்த்துக்களில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் என்னை நேசிக்கும் சிலரது நினைவுகள் எனக்கு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியது.

நான் செய்தது, சொன்னது எல்லாம் ஞாபகம் இல்லாவிட்டாலும், பலருக்கு இன்னும் பொதுவான ஒன்று நினைவில் இருக்கும். அதுவே இந்த நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் எனக்குள்ள உண்மையான அன்பு. அது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. பல தசாப்தங்களாக பல விமர்சனங்கள் மற்றும் அவதூறுகள் இருந்தபோதிலும், நாட்டிற்கான எனது கடமையை நிறைவேற்றுவதற்கான வலிமையை உங்கள் அன்பே எனக்கு வழங்கியதாக இன்றும் நான் நம்புகிறேன். அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல்கள் தொடர்பில் மக்களிடம் பெரும் சந்தேகம்

அதை அழிக்க யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றார்.

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு முக்கிய காரணம் மோசடி, ஊழலாகும் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் கூட இலங்கையில் கொள்முதல் செயல்முறை மிகவும் ஊழல் நிறைந்ததாக அறிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு அரசியல் நியமனம் வழங்கும் தென் மாகாண ஆளுநரின் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பான உண்மைகள் தேர்தல் ஆணையாளர் அலுவல கத்தில் சமர்ப்பிக்க ப்படும்.



அத்துடன்,தீர்ப்புகளை விசாரிப்பதற்காகப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்கும் ஜனாதிபதியின் முயற்சியை உயர் நீதிமன்றம் கடுமையாக எதிர்க்கிறது என்றும், அது நீதித்துறையின் சுதந்திரத்துக்கு மரண அடி என்றும் தெரிவித்த ஜி.எல்.பீரிஸ், சட்டமா அதிபரின் சேவை நீடிப்பு அரசியலமைப்பு பங்களிப்பு சபையினால் இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், சட்டமா அதிபர் திணைக்களத்தை அரசியலாக்குவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குளத்துக்கு நீராடச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு

இது தொடர்பில், அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு, உறவினர்களுக்கும், ஏனைய சிறுவர்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

இரணைமடு மீனவர்களும், பிரதேச மக்களுமாக இணைந்து அந்த சிறுவனை, சனிக்கிழமை(29) நீண்ட நேரமாகத் தேடினர். எனினும், எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை. இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (30) மீண்டும் தேடப்பட்ட நிலையில் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

காணாமல் போன சிறுவன் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 9ல் கல்வி கற்று வருவதுடன், முறிகண்டி வசந்தநகர் பகுதியில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரொபர்ட் கப்ரோத் வருகிறார்

முன்னதாக, 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த ரொபர்ட் கப்ரோத், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்திருந்தார்.

# நால்வர் தாவுவர்?

இதேவேளை, ராஜித சேனாரத்ன மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோரும் அரசாங்கத்துடன் கூட்டணி அமைக்கத் தயாராக இருப்பதாகவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மிதந்த போத்தலை திறந்து அருந்திய ஐவர் பலி

ஏனைய நால்வரும் அதன் பின்னர் இறந்து விட்டனர்.

கடற்படைத் தலைமையகத்தில் அமைந்துள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஊடாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் கடற்படைத் தலைமையகத்திற்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தது.

கடற்படையினர் விஜயபாகு கப்பலை சனிக்கிழமை (29) பல நாள் படகு இருந்த கடல் பகுதிக்கு அனுப்பி வைத்ததாகவும், ஞாயிற்றுக்கிழமை (30) மாலை விஜயபாகு கப்பலின் மூலம் முக்கியமான மீனவர் அழைத்து வரப்பட உள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

"டெவன் 5" என்ற பல



நாள் மீன்பிடிக் கப்பலில் இருந்த உயிரிழந்த 5 மீனவர்களின் சடலங்களும் விஜயபாகு கப்பலில் கொண்டு வரப்படவுள்ளதாக கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

**கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஊடாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் கடற்படைத் தலைமையகத்திற்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தது**

# "முகநூலின் மூலம் அனுரவுக்கு ஜனாதிபதியாக முடியாது"

கனகராசா சரவணன்

நாட்டின் ஜனாதிபதியாக இன்னும் மூன்று மாதங்களில் அனுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டால் ஆசிரியர்களை வீதிக்கு இறக்காமல் ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த முடியும். எனினும், அவரால் ஒருபோதும் இலங்கையின் ஜனாதிபதியாக வரமுடியாது என்பதாலேயே ஜே.வி.பி இவ்வாறு செயற்படுகின்றது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தனியார் உல்லாச விடுதியில் சனிக்கிழமை (29) நடைபெற்ற ஊடக செயலமர்வில் கலந்துகொண்டபோது, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரஷ டி சில்வாவின் நடத்தை சஜித் பிரேமதாசவை வீழ்த்தும் திட்டத்தை வெளிப்படுத்துவதாகவும் அவர் பொருளாதார நிபுணராக இருந்தாலும் நற்செய்தி நாட்டுக்கு வரும் தருணத்தில் ஹர்ஷ டி சில்வாவும் நாட்டை வீழ்த்த வேலை செய்கிறார்.

இந்த நாடு வீழ்ச்சியடைந்த நாடாக இருந்தது. எரிபொருள், எரிவாயு, உணவு, மருந்து இல்லாத நாடாக இருந்தது. நம் நாட்டில் டொலருக்கு பிரச்சனை இருந்தது. அந்த பிரச்சினையால் நாங்கள் வைத்திருந்த கடனை அடைக்க முடியவில்லை. அதனால் தான் நாங்கள் நாடு வீழ்ச்சியடைந்து விட்டது என அறிவித்தோம்.

அதன்பின் கடந்த வாரம், அந்தக் கடனைச் செலுத்தும் திறன் பற்றி எங்களுக்குள்ள பிரச்சினையைப் பற்றி விவாதித்தோம். சர்வதேச நாணய நிதியம் தலையிட்டது. அதற்காக நாங்கள் பல பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். எங்கள் வெளிநாட்டுக் கடனாளிகளுடன் விவாதித்தோம். உள்ளூர் கடனாளிகளுடன் பேசினோம். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு. அதன் பிறகு சர்வதேச அளவில் பாரிஸ் கிளப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி 26ஆம் திகதிக்குள் உடன்பாடு எட்ட முடிந்தது. அந்த ஒப்பந்தத்தின் காரணமாகவே சீனா எக்ஸிம் வங்கி எங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

எமக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஜப்பான் ஏற்கனவே அறிவித்துள்ளது. இப்போது நாடு முன்னேற வேண்டிய நிலையில் உள்ளது. இது நாட்டுக்கு நல்ல செய்தி. சாதி, மத வேறுபாடின்றி நாடு வீழ்ந்த இடத்திலிருந்து எழுச்சி பெறும் என்பது இந்நாட்டின் ஒவ்வொரு மனிதனுக்கும் நற்செய்தி என்றார்.

# "நாளாந்த வேதனத்தை அதிகரிக்க முன்வரவும்"

ஐந்து பரம்பரையாக பெருந்தோட்ட கம்பெனிகளுக்கு இலாப மீட்டி கொடுத்த தொழிலாளர்களுக்கு எதிராக நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்திருப்பதை எண்ணி வெட்கி தலை குனிய வேண்டும். மேலும் மே மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைய நீதிமன்ற தீர்ப்பிற்கு மதிப்பளித்து நிலுவைத் தொகையுடன் இம்மாதம் வேதனம் வழங்கப்பட வேண்டும்.

இல்லையேல் பெருந்தோட்டங்களுக்குள் பல தொழில் பிணக்குகள் முகாமைத்துவ சிக்கல் நிலைகள் ஏற்படக்கூடும் என்றார்.



## திருட்டு நகைகளுடன்
# மூவர் கைது

ரஸீன் ரஸ்மின்

வடமேல் மாகாணத்தில் பல்வேறு பகுதிகளின், வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தங்க நகைகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாகக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகள், 2 கோடியே 50 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியுடையது எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தின் உத்தரவில் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோதே திருடப்பட்ட தங்க நகைகள் தொடர்பில் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நுரைச்சோலை, நாகொல்லாகம, தொரடியாவ, தெதிகம, கொஸ்வத்த ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் இவ்வாறு தங்க நகைகளைத் திருடியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட தங்க நகைகள் கண்டி, குருநாகல், கட்டுகஸ்தோட்டை, கேகாலை ஆகிய பகுதிகளில் உள்ள அடகுக் கடைகளில் அடகு வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சாரதியின் சாமர்த்தியத்தால் பயணிகள் பலர் உயிர் தப்பினர்

மஹிந்த குமார்




இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தின் பின்பக்கத்தில், ஒரு பக்கத்திலிருக்கும் இரண்டு சில்லுகளும் கழற்றுவிட்ட நிலையில், சாரதியின் சாமர்த்தியத்தால், அதில் பயணம் செய்த பயணிகளுக்கு எவ்விதமான ஆபத்துகளும் ஏற்படவில்லை.

இந்த சம்பவம், ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.50க்கு பலாங்கொடையிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்திலேயே இடம்பெற்றுள்ளது.

அந்த பேருந்து இரத்தினபுரிக்கும் ஹெலியகொடக்கும் இடையில் பயணித்துக் கொண்டிருந்த போது, பேருத்தின் பின்பக்க சக்கரங்கள் கழற்று விட்டன. எனினும், ஏதோவொரு கோளாறு ஏற்பட்டுள்ள உணர்ந்து கொண்ட சாரதி, பேருந்தை நிறுத்தி, சோதனை செய்தபோதே, பின்பக்கத்தில் சில்லுகள் இரண்டு கழற்றிருந்தமையை கண்டறிந்துள்ளனர்.

அச்சில்லுகளை இரண்டையும் முறையாகப் பூட்டிக்கொண்டதன் பின்னரே, அங்கிருந்து கண்டியை நோக்கி அந்த பேருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

# மாயமான இஸ்ரேலிய பெண் பாதுகாப்புடன் மீட்பு



மூன்று நாட்களாகக் காணாமல் போயிருந்த இஸ்ரேலிய சுற்றுலாப் பயணியான 25 வயதான பெண், 10 மணிநேர தேடுதலின் பின்னர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் திருகோணமலையில் சனிக்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலின் சுற்றுலாப் பயணி காணாமல் போனமை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு சனிக்கிழமை (29) கொண்டு செல்லப்பட்டது.

இதன்பேரில் பொலிஸ், இராணுவம், பிரதேச செயலகம், உப்புவேலி பிரதேச சபை, சுற்றுலாப் பணியகம் ஆகியவற்றை ஈடுபடுமாறு ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த தரப்பினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு, காணாமல் போன பெண்ணை மயங்கிய நிலையில், சல்லி கோவிலுக்கு அருகில் இருந்து மீட்டுள்ளனர்.

மருத்துவ பரிசோதனையின் பின்னர், இஸ்ரேல் தூதரகத்தில் அப்பெண்ணை ஒப்படைக்குமாறு சுற்றுலாப் பணியத்துக்கு ஆளுநரால் பணிக்கப்பட்டது.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

பாறுக் ஷிஹான்

நீண்ட காலமாகப் பாடசாலை மாணவர்களுக்கு கேரள கஞ்சாவினை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த ஒருவரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை மக்பூலியா பகுதியில் கேரளா கஞ்சா விற்பனை இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிக்கமைய சனிக்கிழமை(29) இரவு சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புத்தளம், நோர்வூட், கரடியனாறு விபத்துகளில்
# இருவர் பலி; இருவர் காயம்

ரஸீன் ரஸ்மின்,
ரஞ்சித் ராஜபக்ஷ, எச்.எம்.எம்.பர்ஸான்







புத்தளம், நோர்வூட் மற்றும் கரடியனாறு ஆகிய பிரதேசங்களில், சனி (29) ஞாயிறு (30) கிழமைகளில் ஏற்பட்ட மூன்று விபத்துகளில், இருவர் பலியானதுடன், இருவர் காயமடைந்துள்ளனர் என அந்தந்த பிரதேசங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### புத்தளம் விபத்தில் ஒருவர் பலி:

புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 7ஆம் கட்டைப் பகுதியில் வைத்து, அனுராதபுரத்தில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த முச்சக்கரவண்டியும், எதிர்திசையில் பயணித்த வேனும் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியான, இராஜாங்கனை-சோலவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

காட்டு யானையொன்று பிரதான வீதியை கடக்க முற்பட்டபோது, அதனைக் கண்டு அச்சமடைந்த முச்சக்கரவண்டி சாரதி உடனடியாக முச்சக்கரவண்டியை திருப்ப முற்பட்டுள்ளார். இதன்போது, அனுராதபுரம் நோக்கிப் பயணித்த வேன் மீது, முச்சக்கரவண்டி மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய வேனின் சாரதியை கைது செய்த கருவலகஸ்வெவ பொலிஸார், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சிற்றோடைக்குள் கார்:

பெண்ணொருவர் ஓட்டிச் சென்ற காரொன்று வீதியை விட்டு விலகி சிற்றோடைக்குள் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

நோர்வூட்டில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த கார் வீதியை விட்டு விலகி சிற்றோடையில் கவிழ்ந்ததில் காரில் பயணித்த பெண் ஒருவரும் மற்றுமொருவரும் காயமடைந்து டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோர்வூட்-தியசிறிகம பிரதேசத்தில் சனிக்கிழமை (29) மாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நோர்வூட் பொலிஸார், புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பெற்ற பெண் ஒருவரே காரை ஓட்டிச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

விபத்தில் கார் பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன், விபத்து தொடர்பில் நோர்வூட் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி:

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் - பதுளை வீதியில் ,மோட்டார் சைக்கிளுடன் வேன் மோதி இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

செங்கலடி சேனைக்குடியிருப்பை சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய தோமஸ் டயஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தொழில் நிமித்தம் பெரிய புல்லுமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும்போது, எதிரே வந்த மினி வேன், பாதை மாறி மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வேன் சாரதியின் தூக்க கலக்கமே விபத்துக்கு காரணமென பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், வேனின் சாரதியை கைது செய்த கரடியனாறு பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# கானகப் பாதை திறந்து வைப்பு...

கிழக்கு நிருபர்கள்


வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பூ நாடா வெட்டி கானகப் பாதைக்கான கதவை உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைத்தார்.

வரலாறு காணாத வகையில் இம்முறை சுமார் 4,000க்கும் மேற்பட்ட அடியார்கள் முதல் தடவையாக முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
















வட கொழும்பில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைக்குத் தேவையான பொருட்கள் 'ராம் சமூக சேவைகள்' அறக்கட்டளையினால் விநியோகிக்கப்பட்டது.

இந்நிகழ்வு வட கொழும்பு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான அமைப்பாளர் கலாநிதி C.Y.P ராம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வட கொழும்பிலுள்ள வட்டார அமைப்பாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# வாடகையை கொடுக்காதது அவமானமாக இல்லையா?

வாடகைக்கு வீடுகளை விடுவோரிடம் இருந்து வரி அறவிடுவதற்கான திட்டத்தை அரசாங்கம் தயாரித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரிகளில் பலவற்றை, செலுத்தாத, கண்டும் காணாது விட்டுவிடும் தரப்பினரும் வரி ஏய்ப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர். எனினும், சாதாரண மக்களின் தலைகளிலும் அந்தனை வரிகளும் விதிக்கப்படும்.

இந்நிலையில், உத்தியோகபூர்வ வீடுகளில் வாடகை பாக்கிகளை 56 அமைச்சர்கள் வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறு செலுத்தப்படாத நிலுவைத் தொகை, 2015 முதல் சுமார் 37 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அரச அதிகாரிகள் 18 பேர் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாவை செலுத்தவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாட்டில் நடந்து வரும் பாரிய வீண், மோசடி நடவடிக்கைகளுடன் இவ்விரு தொகைகளையும், ஒப்பிடும் போது, மிகவும் சிறிய தொகையாகவே பார்க்க முடியும். ஆனால், அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் வாடகை பாக்கி வைத்திருப்பது இந்த சம்பவத்தின் தீவிரத்தை எடுத்துக் காட்டுகிறது.

நாட்டின் சாமானிய மக்களுக்காகச் சட்டங்களை இயற்றும் அமைச்சர்கள் வசிக்கும் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வாடகை கொடுக்காதது அவமானமாகக் கருதப்படவில்லையா என்று கேள்வி எழுப்ப வேண்டும். அமைச்சரின் வீடுகள் கொழும்பு அமைந்திருந்தாலும் அந்தந்த மாகாணங்களில் உள்ள ஏனைய வீடுகளின் வாடகையுடன் ஒப்பிடும்போது, அந்த வீடுகளுக்கு அறவிடப்படும் வாடகை மிகவும் சிறிய தொகையே என்பது அனைவரும் அறிந்த இரகசியம்.

நாட்டு மக்களுக்கு தமது சேவைகளை இடையூறு இன்றி செய்வதற்கு வசதியாக அமைச்சர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. நடவடிக்கைகளில் ஒன்றாக, கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அவர்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்படும். ஆனால், அதே சலுகைகளை வீட்டு வாடகை கூட செலுத்தாமல் தவறிழைப்பது எந்த ஒரு பொது பிரதிநிதியின் கடமையல்ல. செய்யக்கூடாத சமூக விரோதச் செயல் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த நாட்டில் கொழுத்த, வளமான அமைச்சர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களது உத்தியோகபூர்வ குடியிருப்பு தொடர்பான வாடகையைச் செலுத்துவதில் அவர்களுக்கு எந்த சிரமமும் இருக்க முடியாது. அதைப் பாக்கி வைத்தால், அது திட்டமிட்ட தவறு. அப்படிப்பட்ட விஷயங்கள் அவர்களுக்குத் தெரியாது என்பது அவர்கள் சொல்லும் கதைகளில் இருந்து தெரியவில்லை.

மின்சார சபை மற்றும் குடிநீர் வழங்கல் சபை அந்த வீடுகளில் வசித்த அமைச்சர்களைக் கண்டுபிடித்து அந்த கட்டணத்தைச் செலுத்த வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அமைச்சுச் சலுகைகள் என்ற போர்வையில் தாம் அனுபவிக்கும் உட்கட்டமைப்பிற்கு ஒரு சதத்தைக் கூட கொடுக்காத அமைச்சர்களைக் கையாள்வதற்கு அரசாங்கம் ஏதாவது பொறிமுறையைத் தயார் செய்ய வேண்டும் என்பதை இங்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.

அந்த இழப்பை அரசாங்கம் தாங்கிக் கொள்வது தீர்வாகாது. அமைச்சர் செலுத்தாத பில்களின் சுமை இறுதியில் பொது மக்கள் மீது விழுகிறது. அவர்களுக்கு வரியாகச் செலுத்துகிறார்கள். எந்த அரசாக இருந்தாலும், வீட்டு வாடகை உள்ளிட்ட பிற சேவைகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் தடை செய்ய எந்த அமைச்சருக்கும் உரிமை இல்லை. இதனைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மற்றுமொரு படியெடுப்பாக தமிழ்த் தேசியப் பேரவை

லக்ஸ்மன்

ஜனாதிபதி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்துக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் சிவில் அமைப்புகளினால் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்காகச் செயற்படுவதற்கான அமைப்பினை ஏற்படுத்திக்கொள்வதில் கடந்த மாதத்தில் மக்கள் அமைப்பாக அறிவிக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் பொதுச் சபை மீண்டும் ஒரு பெயர் மாற்றத்திற்கு உட்பட்டு தமிழ்த் தேசியப் பேரவையாக இறுதிப் படியாக அறிவிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் மாற்றம் ஏற்படாமலிருக்கும் என்று சொல்ல முடியாது. வவுனியாவில் கடந்த சனிக்கிழமை(29) கூடிய தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகளும், தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் சந்திப்பின் முடிவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வந்திருக்கின்றன. கடந்த வாரத்தில் நாட்டுக்கு வருகைதந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் நக்கலாக வினவியதன் பின்னரும் இந்த முயற்சி நடைபெறுவதுதான் வேடிக்கை.

எட்டப்பட்ட உடன்படிக்கையானது, வரும் 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயபூர்வமாக கையெழுத்திடப்படும் என்றும் மக்கள் அமைப்பும் கட்சிகளும் சம அளவு பிரதிநிதித்துவம் வகிக்கும் பொதுக் கட்டமைப்பானது, தமிழ்த் தேசியப் பேரவை என்று அழைக்கப்படும் என்ற முடிவைச் சொல்லியிருக்கிறது.

இந்தத் தமிழ்த் தேசியப் பேரவையானது, ஜனாதிபதித் தேர்தலை நோக்கிப் பல உப கட்டமைப்புகளை உருவாக்கும். உப கட்டமைப்புக்கள் எல்லாவற்றிலும் கட்சிகளும் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் சம அளவில் உள்வாங்கப்படுவார்கள். இக்கட்டமைப்புகளில் ஒன்று யார் பொது வேட்பாளர் என்பதைத் தீர்மானிக்கும். மற்றொன்று, பொது வேட்பாளருக்குரிய தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும். மற்றொன்று, நிதி நடவடிக்கைகளை முகாமை செய்யும். இவ்வாறு கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன் நிறுத்தும் வேலைகளைத் தமிழ்த் தேசிய பேரவையானது முன்னெடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சந்திப்பில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஐந்து கட்சிகளும் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் என மொத்தம் ஏழு கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்குத் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமைச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கின்ற நிலையில், தமிழ்த் தேசியப் பேரவை உருவாகியிருக்கின்றது. இப் பேரவையானது ஜனாதிபதி தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதில் முழுமூச்சாகச் செயற்பட்டாலும், அப்படியொருவரை நிறுத்தினாலும் நிறுத்தாது விட்டாலும், தமிழர் தேசிய அரசியல் பரப்பில் அரசியல் முறைமை மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற பணியைச் செய்தாக வேண்டும்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா, அப்பாதுரை அமிர்தலிங்கம் போன்றவர்கள் முன்னெடுத்த அகிம்சை, அரசியல் வரலாற்றுத் தடங்கள் தவிடுபொடியாகி பின் அஹிம்சை மூலம் தமிழர் உரிமை சாத்தியப்படாது எனும் தருவாயில் குட்டிமணி, தங்கத்துரை, சிவகுமாரன், வே.பிரபாகரன், உமாமகேஸ்வரன், பாலகுமார், சிறி சபாரத்தினம், பத்மநாபா, உமா மகேஸ்வரன் என பலதரப்பட்ட ஆயுதக் குழுத் தலைவர்கள் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தினைக் கையிலெடுத்திருந்தனர்.

அதன் பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் 1983இன் பின் ஆயுதப் போராட்ட வளர்ச்சியில் 32 இயக்கங்களாகப் பரிணமித்த போதும் 1986இன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை, ஈரோஸ், தமிழ்த் தேசிய இராணுவம் போன்ற இயக்கங்களே செயற்பட்டன. ஆயினும், திம்பு பேச்சுவார்த்தையில் ஐந்து இயக்கங்களே பங்கேற்றனர். ஆயுதப் போராட்ட வளர்ச்சி வீரியம் அடைந்த காலத்தில் அஹிம்சை அரசியலின் இயலாமை ஆயுதம் மூலம் வெற்றி தரும் என்ற நம்பிக்கை தீரத்துடன் போராட்டம் வளர்ச்சி கண்டது. போராட்ட சக்திகளின் உட்கட்சி முரண்பாடுகள், கொள்கை முரண்பாடுகள், ஆதிக்கப் போட்டிகள், துரோக அரசியலும் சூட்டப்பட்டு சகோதரப் படுகொலைகள் குவித்ததோடு தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காகப் போராடியவர்கள் துரோகிகளாக்கப்பட்டனர்.

அதன் பின்னர், தமது உயிர்களை தற்பாதுகாத்துக் கொள்வதற்கான அரசியலாக மாற்றப்பட்டு இறுதியில் பழிவாங்கும் படலம் நடைபெற்றது. இதன் உச்சக்கட்டம் காலத்துக்குக் காலம் நடந்த அரசியல் மாற்றங்கள் இனவாத அரசின் இராணுவ மூலோபாயதிற்கு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட சக்திகள் அனைத்தும் ஏதோ ஒருவகையில் பலியாகின. இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்தியச் சார்பு அணி மேலைத்தேயச் சார்பு அணிகளும் உருவானதான மாயை ஏற்பட்டது. இச் சிக்கல் நிலைமைகள் தொடர்ந்து 2009 மே முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னரான போர் ஓய்வினையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலை ஆக்கிரமித்தது.

அந்த ஆக்கிரமிப்பு பொதுப் பெயரில் இருந்தாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடையதாகத்தான் இருந்தது என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. இது தேர்தல் காலங்களில் வெளிப்படையாகவே வெளிப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கட்சி அரசியலுக்கு அப்பால் சுயலாப அரசியலை முன்னிறுத்தியதாகவே இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசு கட்சியை முதன்மைப்படுத்தி ஏற்படுத்தும் முயற்சிகள் மறைமுகமாகக் கூட்டமைப்பிற்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகளைப் புறந்தள்ளும் முயற்சி ஆரம்பத்தில் வெற்றியளிக்கவில்லையானாலும் அதற்கு மாற்றீடாக கூட்டமைப்பின் சகோதர கட்சிகளின் வெற்றி பெற்ற அங்கத்தவர்களை உள்வாங்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அதில் பலரும் கட்சி மாறினர்.

இவ்வாறான குத்து வெட்டுக்கள் குழிபறிப்புகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியின் ஏகபோக உரிமை கொண்டாடும் வகையில் மிகச் சாதுரியமாக கையாண்டது. இவ்வாறான நெருக்கடிகளுக்குள்தான் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் தாம் தனித்துக் போட்டியிடவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்தது, இந்த அறிவிப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிலைகுலைய வைத்தது. இதன் பின்னர் கூட்டமைப்பிலிருந்த ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சியே விலகியிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாகவே இருக்கிறது என்று அறிவிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதற்காக ஒரு சின்னத்தினை குத்துவிளக்காகக் கண்டுபிடித்தனர். ஆனாலும், அவர்கள் வெளிப்படையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று இயங்க முடியாத சட்டச் சிக்கல் தமிழரசுக் கட்சியினரால் ஏற்படுத்தப்பட்டது. அதனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் இயங்கவேண்டிய சூழல் கொண்டுவரப்பட்டது.

இப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கினாலும் அரசியல் ரீதியாகத் தாமே மக்களின் அரசியலுக்கானவர்கள் என்ற தோரணையைத் தமிழரசுக் கட்சி காண்பிக்காமலில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவுசெய்யாமை, ஏனைய கட்சிகளுக்கு அதிகாரம் பகிரப்படுவதற்குப் பின்னின்றமை, ஏகபோக உரிமையைச் செலுத்தியமை, காட்சிகளை வேண்டுமென்றே புறக்கணித்தல் என இருந்துவந்த முரண்பாடுகளை வைத்துக் கொண்டு ஒரு கூட்டு மக்களுக்காக எப்படி இயங்க முடியும் என்பதுதான் இந்த இடத்தில் அப்போதிலிருந்து கேள்வியாக இருந்து வந்தது, தமிழரசுக் கட்சியின் இந்த தந்திரோபாய அரசியல் நகர்வை அறிந்துகொண்ட இதர கட்சிகள் என்ன நடந்தாலும் இதிலிருந்து விலகுவதில்லை என்ற தீர்மானத்துடன் பொறுமை காத்து வந்தாலும் ஏகபோகத்திலிருந்து தமிழரசுக் கட்சி இறங்குமா என்பது கேள்வி.

தமிழ்த் தேசிய அரசியலில் ஆயுத மௌனிப்பின் பின் தமிழ்த் தேசிய அரசியல் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் மூலோபாயமாகவே இதனைக் கொள்ளவும் முடியும். இந்த மூலோபாயத்துக்குள் தமிழரசுக் கட்சியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இடைஞ்சலாக இருந்த அரசியல்வாதிகள் ஆயுத கலாசாரத்துக்கானவர்களாகவும் துரோகிகளாகவும் மக்களிடத்தில் காண்பிக்கப்பட்டனர். இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியப் பேரவை தமிழரசுக் கட்சி கருத்தியலுக்கு அப்பாற்பட்டு எவ்வாறு செயற்படு முடியும் என்பது முதற் கேள்வியாகும்.

நாட்டில், தேர்தலுக்குத் தயாராகும்படி அறிவிக்கப்படவிருக்கின்ற நிலையில், தமிழ்த் தேசிய அளவில் மிக மோசமான சிக்க நிலைமை காணப்படுகின்ற சூழலில் அரசியல் சார்ந்த வெற்றியை இலக்காகக் கொண்டு வியூகங்கள் அமைத்து பிரசாரங்களை நடத்தி நமக்கான எதிர்பார்ப்பை எவ்வாறு அடைந்து கொள்ள முடியும் என்பது மற்றொரு கேள்வி. இருந்தாலும் தமிழ் மக்களின் தேசிய அரசியல் அபிலாஷை நிறைவேற்றத்துக்காகத் தமிழ்த் தேசியப் பேரவை தொடர்ந்தும் செயற்பட்டு பணியாற்றவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்துபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களிலிருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை. இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை

ஒலுவில் பிரதேசத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள பொன்னன்வெளி கண்ட விவசாயக் காணிகளுக்கு மாற்றுக் காணி மற்றும் நஷ்டஈடு வழங்குமாறு, பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளால் ஞாயிற்றுக்கிழமை (30) அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையைச் சாதகமாக பயன்படுத்தி முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் நெற்செய்கை காணி கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 75 குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்காணியை இழந்தவர்களுக்கு மாற்றுக் காணி வழங்குவதற்கு ஒலுவில்-பாலையடிவட்டை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுக் காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த வேளையில், இவை தடுத்து நிறுத்தப்பட்டது.

இக்காணிகளுக்கு மாற்றுக் காணி வழங்குமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் எவ்வித நடவடிக்கைகளும் இது வரை எடுக்கவில்லை.

உங்களது ஆட்சியில் காணிகள் மீள வழங்கப்பட்டு வருவதனை பாராட்டுகின்றோம்,

எனவே, எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்டுள்ள பொன்னன்வெளி கண்ட விவசாயக் காணிகளுக்கு மாற்றுக் காணி மற்றும் நஷ்டஈடு வழங்குமாறு அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- எம்.எஸ்.எம்.ஹனீபா

# வெகுசன ஊடகங்களில் சமூகமயமாக்கல் செயற்பாடு

நித்தியானந்தம ஹக்சனா,
கல்வியியல் சிறப்புக் கற்கை,
இறுதியாண்டு மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்ற அடிப்படையில், தனித்து வாழாது சமூகத்துடன் இணைந்து ஒன்றித்து வாழ்பவனாகக் காணப்படுகின்றான். மனிதன் தனது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தான் வாழ்கின்ற சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றான். அவ்வகையில், ஆரம்பக் காலத்திலிருந்து மனிதனுடைய தொடர்பாடல் செயன்முறையானது படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பத் தொடர்பாடலாக வளர்ச்சி கண்டுள்ளது.

தொடர்பாடல் செயன்முறையில் மாத்திரமல்லாது, மனிதனுடைய கல்வி நடவடிக்கைகளிலும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு இன்று பாரியளவில் வளர்ச்சி கண்டிருக்கின்றது என்றே கூற வேண்டும். அவ்வகையில் இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கல்விச் சமூகமயமாக்கலை ஏற்படுத்துவதில் வெகுசன ஊடகங்கள் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக ஊடகம் சார்ந்த இணையத்தளங்கள், வலைத்தளங்கள், இணையவழி வானொலி, தொலைக்காட்சிகள் ஆகியன வெகுசன ஊடகங்களாகும். இவற்றினூடாக எவ்வாறு சமூகமயமாக்கல் செயற்பாடு இடம்பெறுகின்றது என்று பார்த்தோமானால் பிள்ளைகள் இத்தகைய ஊடகங்களின் வாயிலாக உலக நடப்புக்களை அறிந்து கொள்வதோடு தாம் அறிந்திராத பல விடயங்களையும் கற்றுக் கொள்கின்றார்கள். இருந்த இடத்திலிருந்து கொண்டே தாம் வாழ்கின்ற உலகம், அங்கு வாழ்கின்ற மக்கள், அவர்களினுடைய கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறை சார்ந்த பல விடயங்களையும் அறிந்து கொள்கின்றார்கள்.

தொலைக்காட்சியின் ஊடாக மாணவர்கள் கல்வி கற்றுக்கொள்ளக்கூடிய நிலை இன்று காணப்படுகின்றது. கல்வி TV போன்ற சில தொலைக்காட்சி அலைவரிசைகளில் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் மூலமாக மாணவர்கள் தாம் கற்கின்ற பாடங்கள் தொடர்பான பூரண விளக்கத்தையும், பூரண அறிவையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

கையடக்கத் தொலைபேசியை எடுத்துக் கொண்டோமானால் E-Library, E-Thaksalawa போன்ற தேடல் பொறிகள் போன்ற கல்விசார் இணையத்தளங்கள் வாயிலாகவும், FaceBook, YouTube போன்ற சமூக ஊடகங்கள் மூலமாகவும் கல்வி சார்ந்த பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இன்றைய காலத்தில் கையடக்கத் தொலைபேசியின் பாவனை காரணமாகவே மாணவர்களிடத்தில் விரைவாக சமூகமயமாக்கல் ஏற்படுத்தப்படுகின்றது.

இலத்திரனியல் ஊடகங்களானது தொலைக்கல்வி மூலமான கற்றல், திறன் வகுப்பறை மூலமான கற்றல் போன்றவற்றைச் சாதகமாக்கி கல்விச் சமூகமயமாக்கலுக்கு வித்திட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள், மாணவர்களின் தனிப்பட்ட திறன்கள், கல்வி சார்ந்த தகவல்கள் போன்றவற்றைப் பாடசாலைக்குரிய வலைப்பக்கத்தில் பதிவிட்டுப் பகிர்ந்து கொள்வதன் மூலமாக சிறந்த முறையில் கல்விச் சமூகமயமாக்கலை ஏற்படுத்த முடிகின்றது.

வெகுசன ஊடகங்களின் வாயிலாக இன்றைய மாணவர்கள் விரைவான சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இருப்பினும் இத்தகைய வெகுசன ஊடகங்களின் பாவனை மாணவர்கள் மத்தியில் பாதகமான விளைவுகளையும் தோற்றுவிக்கின்றது. குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் சமூகத்துடனான தொடர்பு மற்றும் குடும்பத்துடனான உறவு என்பவற்றில் சிக்கல் நிலையைத் தோற்றுவிக்கின்றது. கையடக்கத் தொலைபேசியை பாவிப்பதன் மூலமாக உலக நடப்புக்களை அறிந்து கொள்ளலாம் என்ற நிலை மாறி கையடக்கத் தொலைபேசியைக் கீழே வைத்தால்தான் வீட்டில் நடக்கின்ற விடயங்கள் தெரிய வரும் என்ற நிலைக்கு வந்து விட்டது.

குடும்பத்திலுள்ள அனைவரும் ஒற்றுமையாக இருந்து ஒன்றாக உணவு உண்டு வாழ்ந்த நிலைமை மாறி குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கையடக்கத் தொலைபேசியுடன் அன்றாட வாழ்வை நகர்த்திக் கொண்டு செல்கின்றனர். இளம் பருவத்தினர் தங்களுடைய நண்பர்களுடன் வெளியில் சென்று ஒற்றுமையாகப் பேசிச் சிரித்து விளையாடிய நிலைமை மாறி இன்றைய காலகட்டத்திலிருந்த இடத்திலிருந்து கொண்டே இணைய விளையாட்டுக்களில் ஈடுபடுவது அதிகரித்து விட்டது. இதனால் விட்டுக் கொடுப்பு, ஒற்றுமையுணர்வு, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு போன்ற பண்புகள் இன்றைய மாணவர்களிடத்தில் விருத்தி பெறாத நிலை காணப்படுகின்றது.

சமூக உறவைக் கட்டியெழுப்புவதிலும் இத்தகைய வெகுசன ஊடகங்கள் பாரிய தடையாகக் காணப்படுகின்றன. கையடக்கத் தொலைபேசியில் Chat செய்வதன் மூலமாகவே இன்றைய தகவல் பரிமாற்றம் இடம்பெறுகின்றது. இதன் காரணமாக சமூகத்திலுள்ளவர்களுடன் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது, எவ்வாறு முகபாவனைகள் மற்றும் உடல்மொழியைக் கையாள்வது போன்ற விடயங்களை அறிந்து கொள்ளத் தெரியாமல் போகின்றார்கள். ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் தொலைபேசியில் சர்வ சாதாரணமாக டீடமுஉம செய்து விட்டுப் போகலாம். ஆனால் சமூகத்தில் நேருக்கு நேராக வரும் பிரச்சினைகளைக் கையாள்வதில் பாரிய சிக்கல்கள் ஏற்படுகின்றது.

மேலும் இத்தகைய வெகுசன ஊடகங்களின் வாயிலாக மாணவர்கள் மத்தியில் இன்றைய காலகட்டத்தில் சினிமா மோகம் அதிகரித்துள்ளது. திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் போன்றவற்றில் காண்பிக்கப்படுகின்ற மது அருந்துதல், புகைத்தல், கொலை செய்தல், போதைப் பொருள் பாவனை போன்ற காட்சிகளின் வாயிலாகப் பிள்ளைகளும் அவற்றைக் கற்று தவறான நடத்தைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். மேலும் மாணவர்கள் FaceBook, YouTube, Tiktok போன்ற சமூக ஊடகங்களுக்கு அடிமையாகுதல், இணைய விளையாட்டுக்களுக்கு அடிமையாகுதல் போன்ற நிலைமையும் அதிகரித்து வருகின்றது.

இலங்கையில் மிக அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில் 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தென் மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர் குழுவொன்று மேற்கொண்ட ஆய்வொன்றில் பல சிறுவர்கள் இரவுநேரங்களில் தூங்காது அதிக நேரம் கையடக்கத் தொலைபேசியைப் பாவிப்பதாகவும், கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ள பல சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு அவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெகுசன ஊடகங்களின் அதிகரித்த பாவனை காரணமாக இன்றைய தலைமுறையினர் தடம் மாறிப் போகின்ற நிலை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. குறிப்பாகத் தற்கொலைகளின் அதிகரிப்பிற்கு இத்தகைய வெகுசன ஊடகங்களின் பாவனை பிரதான காரணமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்றைய நவீன காலகட்டத்தில் இலத்திரனியல் ஊடகங்களினுடைய பாவனை இல்லாமல் வாழ்வது அசாத்தியமான காரியம் என்பது உண்மையாகும். ஆனால் அதன் பாவனையை மட்டுப்படுத்திக் கொள்வதன் மூலமாக சிறந்த பயன்களைப் பெற முடிவதோடு சிறந்த முறையில் சமூகமயப்படுத்தப்படவும் முடியும்.

எனவே, வெகுசன ஊடகங்களின் பாவனையை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இது தொடர்பான அதிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது பெற்றோரே ஆவர். ஏனெனில் பிள்ளைகள் தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி போன்றவற்றின் பாவனையை முதன்முதலில் ஏற்படுத்திக்கொள்வது குடும்பத்திலேயாகும். எனவே, பெற்றோர் தமது பிள்ளைகளைக் கண்காணிக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாகப் பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தும் கால அளவு குறித்து எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட வயது வரும் வரையில் பிள்ளைகளுக்குக் கையடக்கத் தொலைபேசி வாங்கிக் கொடுப்பதையும், தொலைபேசி பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எனவே பயன் தரக்கூடிய விடயங்களுக்கு மாத்திரம் வெகுசன ஊடகங்களை உபயோகிப்பதன் மூலமாக சிறந்த பயன்களைப் பெற முடிவதோடு சரியான முறையில் சமூகமயப்படுத்தப்படக் கூடியதாக இருக்கும். பாலில் நீர் கலந்திருப்பினும் நீரை விட்டு பாலைப் பருகும் அன்னம் போல் பயன் தரும் விடயங்களுக்கு மாத்திரம் வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்தி நலன் பெற வேண்டும்.





# கொமர்ஷல் வங்கி அதிகம் கடன் வழங்கிய வங்கி

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SME) 2023ஆம் ஆண்டில் மிகப்பெரிய கடன் வழங்குநராக கொமர்ஷல் வங்கி திகழ்ந்தது. இதற்கிணங்க மொத்தம் 17 அரச மற்றும் தனியார்த்துறை கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன் பெறுமதியில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை வங்கி கொண்டிருந்ததாக நிதி அமைச்சு உறுதி செய்துள்ளது.

2023ஆம் ஆண்டிற்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கிணங்க, வழங்கியுள்ள ரூ. 704.142 பில்லியன் மொத்தக் கடனில் ரூ. 231.655 பில்லியனை கொமர்ஷல் வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SME) கடனாக வழங்கியுள்ளது. இது வங்கி வழங்கியுள்ள மொத்தக்கடனில் 33% ஆகும்.

நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கொமர்ஷல் வங்கியானது தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக மிகப்பெரிய கடன் வழங்குனராக திகழும் நிலையில். நிதியமைச்சின் கூற்றுக்கிணங்க நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 52%, வேலைவாய்ப்பில் 45% மற்றும் ஏற்றுமதியில் 20% என்ற ரீதியில் பங்களிப்பினை வழங்கி வருகிறது.

SME துறைக்கான வங்கியின் அர்ப்பணிப்பு குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி திரு சனத் மனதுங்க, 'சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் நிலையில் தற்போதைய நிலையற்ற பொருளாதார நிலைமையில் இத்துறைக்கு கணிசமான ஆதரவு தேவைப்படுகிறது. 1970களின் முற்பகுதியில் இருந்து, கொமர்ஷல் வங்கி இந்தத் துறையின் முழுமையான வளர்ச்சியில் மூலோபாய ரீதியாக கவனம் செலுத்தி வருகிறது. எங்களது முயற்சிகள் தொடர்ந்து நான்காவது ஆண்டாக SME துறைக்கு மிகப்பெரிய கடன் வழங்குபவராக எங்களை நிலைநிறுத்தியுள்ளது. SME பிரிவுக்கான எங்கள் கடன் 2020இல் ரூ 163.9 பில்லியனில் இருந்து 2023இல் ரூ.231.6 பில்லியனாக வளர்ச்சியடைந்துள்ளது. இது இந்தத் துறையில் வங்கியின் உறுதியான உறுதிப்பாட்டை விளக்குவதாக உள்ளது.

கொமர்ஷல் வங்கியானது SME துறையின் நிதித் தேவைகளை மதிப்பிட்டு வருவதுடன் ஏற்றுமதி, உள்நாட்டு உற்பத்தி, பெண்கள் தலைமையிலான வர்த்தகங்கள் மற்றும் இறக்குமதி மாற்றுத் தொழில்கள் போன்ற இலக்குப் பிரிவுகளில் வங்கியால் பாதுகாக்கப்பட்ட சலுகைக் கடன் வரிகள் மூலம் நிதி உதவியானது நீடிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு காரணங்களால் குறைவான செயல்திறன் கொண்ட வர்த்தக செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக, முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞைகளை வெளிப்படுத்தும் வர்த்தகர்களுக்கு முன்கூட்டியே ஆதரவளிக்க, 2020ஆம் ஆண்டில் வர்த்தக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவை வங்கி அமைத்தது.

Slingshot Accelerator இரண்டாம் திட்டத்தை

# ஹேமாஸ் மற்றும் Hatch முன்னெடுக்கவுள்ளன




ஹேமாஸ், Hatch உடன் இணைந்து Hemas x Hatch Slingshot திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன. 2023ஆம் ஆண்டில் முன்னெடுத்திருந்த Accelerator திட்டத்தின் வெற்றிகரமான பூர்த்தியைத் தொடர்ந்து, வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதாரப் பராமரிப்பு போன்ற துறைகளைச் சேர்ந்த 25 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு Slingshot 2.0 ஊடாக ஆதரவளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. முதற் கட்டத்தின் போது கல்வி மற்றும் கல்வித் தொழில்நுட்பம், வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் சரக்குக் கையாளல் போன்ற துறைகளைச் சேர்ந்த 25 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கும், 8 ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு accelerated ஆதரவையும் வழங்கியிருந்தது. இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு புத்தாக்கம் மற்றும் பங்களிப்பை ஊக்குவித்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

நீண்ட வரலாற்றைக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஹேமாஸ் குழுமம், வியாபார சூழலில் வெற்றிகரமாக செயலாற்றுவதற்கு புத்தாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. இந்த அர்ப்பணிப்பின் பிரகாரம், 2023ஆம் ஆண்டில் தனது 75 வருட பூர்த்தியை குறிக்கும் வகையில் 75 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான இலக்கையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியிருந்தது. இந்த ஆரம்பநிலை நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இந்தத் திட்டங்கள் உதவியாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பை வழங்கும் நிறுவனங்களாகவும் திகழ்கின்றன.

Hemas x Hatch Slingshot நிகழ்ச்சித் திட்டமானது, சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் பரஸ்பர அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தினூடாக ஆரம்பநிலை நிறுவனங்கள் பெருமளவு பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுவதுடன், ஆலோசனைகளைப் பெறல், பெறுமதியான வளங்களை அணுகல் மற்றும் ஹேமாஸின் பரந்த வலையமைப்பை அணுகல் போன்ற வசதிகளைப் பெற்று தமது வெற்றிப் பயணத்தை துரிதப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மாறாக, புத்தாக்கமான சிந்தனைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்றவற்றுக்கு வெளிப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பை ஹேமாஸ் பெற்று, அதன் வளர்ச்சி உறுதி செய்யப்படும். இந்த கைகோர்த்த செயற்பாடுகளினூடாக, இலங்கையினுள் மிகவும் விறுவிறுப்பான ஆரம்பநிலை கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதுடன், அதனூடாக தொழில்நிலைகள் உருவாக்கப்பட்டு, தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கப்படும்.

இந்த அறிமுகம் தொடர்பில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் பிரதம மூலோபாய மற்றும் வளர்ச்சி அதிகாரி ரிஸ்னி பைசல் கருத்துத் தெரிவிக்கையில், "முதலாவது Hemas x Hatch Slingshot நிகழ்ச்சிக்கு கிடைத்திருந்த பெருமளவு வரவேற்பைத் தொடர்ந்து, இலங்கையின் ஆரம்ப நிலை நிறுவன கட்டமைப்புக்கு பெருமளவு ஆதரவளிக்கப்பட்டிருந்தது.

Slingshot 2.0 என்பது இந்தத் திட்டத்தின் மூலோபாய தொடர்ச்சியாகும்.கல்வி, கல்வித் தொழில்நுட்பம், வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் சரக்குக் கையாளல் போன்ற பிரதான துறைகளில் இலக்கு வைக்கப்பட்ட ஆதரவை வழங்குவதனூடாக, சவால்களுக்கு தீர்வை வழங்கக்கூடிய மற்றும் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய புத்தாக்கங்களை ஊக்குவிக்க நாம் எதிர்பார்க்கின்றோம். உறுதியான மற்றும் மீட்சியுடனான இலங்கை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஹேமாஸின் நீண்ட கால நோக்கத்துடன் மிகவும் பொருத்தமானதாக இது அமைந்துள்ளது. ஆதரவளிக்கப்படும் ஆரம்பநிலை நிறுவனங்கள் வெற்றிகரமாக வியாபாரங்களாக மாறுவது மாத்திரமன்றி, முன்னேற்றத்தை வழிநடத்திச் செல்வோர், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தல், நிதிசார் உள்ளடக்கத்தை தோற்றுவித்தல் மற்றும் சகல இலங்கையர்களுக்கும் பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்திருக்கும்" என்றார்.

லண்டன்

# கீதையால் பெருமை

## பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் பெருமிதம்

பகவத் கீதையை வைத்து, பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதில் பெருமை அடைகிறேன் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் பெருமிதத்துடன் கூறினார்.

650 தொகுதிகள் கொண்ட பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு ஜூலை 4ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக் ஆட்சியை தக்க வைப்பாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. லண்டனில் உள்ள சுவாமிநாராயண் கோயிலில் ரிஷி சுனக் சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் தேர்தல் பிரசாரத்தில் பேசியதாவது,



பகவத் கீதையை வைத்து, பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்றதில் பெருமை அடைகிறேன். நமது கடமையை உண்மையாகச் செய்ய வேண்டும். மேலும், இந்து மத நம்பிக்கையில் இருந்து உத்வேகமும், ஆறுதலும் கிடைக்கின்றன. இதை என் அன்பான பெற்றோர் எனக்கு கற்று கொடுத்து வளர்த்தனர். தற்போது நான் என் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கிறேன். பொது சேவை செய்ய தர்மம் தான் எனக்கு வழிகாட்டுகிறது என்றும் அவர் பேசினார்.



போர்னோ

### நைஜீரிய குண்டுவெடிப்பில்

## 18 பேர் பலி; 48 பேர் காயம்

நைஜீரியாவில் மூன்று இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில், 18 பேர் உயிரிழந்தனர். 48 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள போர்னோ மாநிலத்தில் திருமண நிகழ்வு, மருத்துவமனை மற்றும் இறுதிச்சடங்கு ஆகிய மூன்று இடங்களில் குண்டுவெடித்தது. இச்சம்பவங்களில் 18 பேர் உயிரிழந்தனர். 48 பேர் காயமடைந்தனர்.

பலர் ஆபத்தான நிலையில் உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மேலும், அப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஈரான்

### ஈரான் ஜனாதிபதித் தேர்தல்:

## 2ஆம் கட்ட வாக்குப்பதிவு

ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் முன்னணி வேட்பாளர்களுக்கு பெரும்பான்மை பலம் இல்லாததால், 2ஆம் கட்ட வாக்குப்பதிவு எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த மே மாதம் ஹெலிகொப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி மரணமடைந்தார். அந்நாட்டின் அரசியலமைப்பு சட்டப்படி, 50 நாட்களுக்குள் தேர்தல் நடத்தி புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். அதன்படி, ஜனாதிபதித் தேர்தல் சில தினங்களுக்கு முன் நடந்தது.

இதன் முடிவுகளின்படி, மொத்தம் 2.45 கோடி வாக்குகள் பதிவாகிவுள்ளன.

இதில், சீர்த்திருத்தவாதிகள் அரசியல் பிரிவு வேட்பாளர் மசூத் பெசெஷ்கியானுக்கு 1.04 கோடி வாக்குகளும், வலதுசாரிகள் அமைப்பு சயீத் ஜலிலிக்கு 94 இலட்சம் வாக்குகளும், பாராளுமன்ற சபாநாயகர் முகமது பாகர்



கலிபாபுக்கு 33 இலட்சம் வாக்குகளும், ஷியா பிரிவு மதகுரு முஸ்தபா பூர்மொஹம்மதிக்கு 2.06 இலட்சம் வாக்குகளும் கிடைத்துள்ளன.

வெற்றியாளர் 50 சதவீதத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற வேண்டும். முன்னணியில் உள்ள வேட்பாளர்கள் எவரும் பெரும்பான்மை பலத்தை எட்டாததால், முதல் 2 இடங்களை பிடித்த மசூத் பெசெஷ்கியான் மற்றும் சயீத் ஜலிலி இடையே எதிர்வரும் 5ஆம் திகதி 2ஆம் கட்ட வாக்குப்பதிவு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரான் வரலாற்றில் கடந்த 2005இல் மட்டுமே ஜனாதிபதித் தேர்தல் 2 கட்டமாக நடத்தப்பட்டது. தற்போது 2ஆவது முறையாக இது நிகழ்கிறது.



பாலக்காடு

### ஜீப்பை மோதி விட்டு தப்ப முயன்ற

## போதைப்பொருள் கடத்தல் குழு

கேரளாவில் பொலிஸ் ஜீப்பை மோதி விட்டு தப்பமுயன்ற போதைப்பொருள் கடத்தல் குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம், வடக்கஞ்சேரி பொலிஸார், சனிக்கிழமை(29) கோவை- கொச்சின் தேசிய நெடுஞ்சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்ட போது, அதிவேகமாக சென்ற ஒரு காரை, பின் தொடர்ந்து சென்றுள்ளனர்.

அப்போது அந்தக் கார் ஜீப்பில் மோதியதில், கார் டயர் வெடித்து கட்டுப்பாடு இழந்து அருகில் உள்ள மரத்தில் மோதி நின்றது.

தொடர்ந்து, காரில் இருந்த கும்பல் இறங்கி ஓட முயன்ற போது, பொலிஸார் பிடித்தனர்.

காரில் நடத்திய சோதனையில் 2 கிலோ கஞ்சா, 100 கிராம் எடை கொண்ட எம்.டி.எம்.எ., என்ற போதை மாத்திரை என்பன மறைத்து வைத்திருப்பதை கண்டுபிடித்தனர்.



ஹரித்வார்

### கங்கை

## வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட கார்கள்

உத்தரகண்ட் மாநிலம் ஹரித்வாரில் கங்கையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஆற்றுப்படுகையில் நிறுத்தப்பட்ட ஏராளமான கார்கள் அடித்து செல்லப்பட்டன.


உத்தரகண்ட் மாநிலம் ஹரித்வார், இந்துக்களின் வழிபாட்டு தலமாக விளங்குகிறது. கங்கையாற்றங்கரையில் அமைந்துள்ள இங்கு யாத்ரீகர்கள், சுற்றுலாப் பயணியர் என ஏராளமானோர் வருகை தருவது வழக்கம்.

கங்கை ஆற்றின் துணை ஆறான சுகி ஆற்றுப்படுகை எப்போதும் வறண்ட நிலையில் காணப்படுவதால், அங்கு ஏராளமான வாகனங்கள் நிறுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் கங்கை ஆற்றில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக, சுகி ஆற்றுப்படுகையிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.

இந்த சம்பவத்தில் உயிரிழப்பு மற்றும் காயமடைந்தவர்களின் விபரங்களை மாநில அரசு இதுவரை வெளியிடவில்லை.

உத்தரகண்ட் மாநிலத்தில் எதிர்வரும் 4 திகதி வரை கனமழை நீடிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



### இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# இந்தியா சம்பியன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியனானது.

பார்படோஸில் சனிக்கிழமை (29) நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான இறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இரண்டாவது தடவையாக இருபதுக்கு-20 உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில், விராட் கோலி, ஷர்மா மூலம் வேகமாக ஆரம்பித்த இந்தியா இரண்டாவது ஓவரிலேயே ஷர்மா, அடுத்து வந்த றிஷப் பண்டை கேஷவ் மஹராஜ்ஜிடம் பறிகொடுத்தது. பின்னர் ககிஸோ றபாடாவிடம் சூரியகுமார் யாதவ்விடம் இழந்து தடுமாறியது.

எனினும் கோலியுடன் இணைந்த அக்ஸர் பட்டேலின் 47 (31) ஓட்டங்கள் காரணமாக ஓட்டங்களைச் சேகரித்த இந்தியா, கோலியின் 76 (59), ஷிவம் டுபேயின் 27 (16) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அன்றிச் நொர்கியா 4-0-26-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 177 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா ஆரம்பத்திலேயே றீஸா ஹென்ட்றிக்ஸ், அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரமை ஜஸ்பிரிட் பும்ரா, அர்ஷ்டீப் சிங்கிடம் பறிகொடுத்தது.

பின்னர் குயின்டன் டி கொக்கும், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 31 (21) ஓட்டங்களுடன் பட்டேலிடம் ஸ்டப்ஸ் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த ஹென்றிச் கிளாசென் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 39 (31) ஓட்டங்களுடன் அர்ஷ்டீப் சிங்கிடம் டி கொக் வீழ்ந்தார்.

தொடர்ந்து வந்த டேவிட் மில்லரும் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில், வெற்றியிலக்கை நோக்கி தென்னாபிரிக்கா நகர்ந்து 30 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் 52 (27) ஓட்டங்களுடன் ஹர்திக் பாண்டியாவிடம் கிளாசென் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த மார்கோ ஜன்சனும் பும்ராவிடம் வீழ்ந்தார்.

அந்தவகையில், இறுதி ஓவரில் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில், சூரியகுமார் யாதவ்வின் அபாரமான பிடியெடுப்பில் 21 (17) ஓட்டங்களுடன் மில்லர் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் வந்த றபாடா நான்கு ஓட்டங்களைப் பெற்றபோதும் பாண்டியாவின் இறுதி ஓவரின் ஐந்தாவது பந்தில் அவர் ஆட்டமிழக்க 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களையே பெற்ற தென்னாபிரிக்கா ஏழு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கோலியும், தொடரின் நாயகனாக பும்ராவும் தெரிவாகினர்.

### இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

## அதிக ஓட்டங்களைப் பெற்ற குர்பாஸ்

ஐக்கிய அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று முடிந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானின் ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் பெற்றுள்ளார்.

எட்டுப் போட்டிகளில் 100 பந்துகளில் 124.33 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 281 ஓட்டங்களைப் பெற்று முதலாமிடத்தில் குர்பாஸ் காணப்படுகின்ற நிலையில், எட்டுப் போட்டிகளில் 100 பந்துகளில் 156.70 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 257 ஓட்டங்களைப் பெற்று இரண்டாமிடத்தில் இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மாவும், ஏழு போட்டிகளில் 100 பந்துகளில் 158.38 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 255 ஓட்டங்களைப் பெற்று மூன்றாமிடத்தில் அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட்டும் காணப்பட்டிருந்தனர்.



### இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

## அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பரூக்கி, அர்ஷ்டீப்

ஐக்கிய அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று முடிந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் அதிகபட்சமாக ஆப்கானிஸ்தானின் பஸல்ஹக் பரூக்கியும், இந்தியாவின் அர்ஷ்டீப் சிங்கும் 17 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளனர்.

பரூக்கில் ஓவருக்கு 6.31 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்த நிலையில், அர்ஷ்டீப் ஓவருக்கு 7.16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார்.



இவர்களுக்கு அடுத்ததாக இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ராவும், தென்னாபிரிக்காவின் அன்றிச் நொர்கியாவும் தலா 15 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர். பும்ரா ஓவருக்கு 4.17 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்த நிலையில், நொர்கியா ஓவருக்கு 5.74 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்தார்.

### இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து

## ஓய்வு பெற்ற விராட் கோலி

ஐக்கிய அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று முடிந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத்துடன் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து இந்தியாவின் விராட் கோலி ஓய்வு பெற்றுள்ளார்.



இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 2010ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 35 வயதான கோலி, 125 போட்டிகளில் 100 பந்துகளில் 137.04 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 4,188 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

### இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து

## கோலியுடன் இணைந்து விடைபெற்ற றோஹித்



ஐக்கிய அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று முடிந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து விராட் கோலியுடன் இணைந்து இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மாவும் ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 37 வயதான ஷர்மா, 159 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 100 பந்துகளில் 140.89 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 4,231 ஓட்டங்களைப் பெற்று இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் மற்றும் அதிக சதங்களாக ஐந்து சதங்களைப் பெற்றவராக ஓய்வு பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 01, ஜூலை 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.